சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு.G.கிருஷ்ணன், B.A., L.L.B.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.121/2018

பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா. 1 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. S. ஷர்மிளா, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | திரு. விஜயகுமார் | த/பெ: விஜயராகவன் | |
| | | க/பெ : | |
| வயது: | | ஊர் : | |
| தொழில்: | | அலைபேசி எண்: | |
| தேதி: | 21.08.2024 | முகவரி: | |

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை...

1 ஆம் வாதி மாரியம்மாள் எனது சின்னம்மா என்று சொன்னால் சரிதான். 2 ஆம் வாதி கணேஷ், 3 ஆம் இளவர் வாதி விஷ்ணு ஆகியோர்கள் எனது சகோதரர்கள் என்று சொன்னால் சரிதான். அவர்கள் தாவா சொத்திலுள்ள தங்களது பாகத்தை பிரித்து அளிக்கவேண்டி இந்த தாவாவினை தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் உள்ள தங்களது பங்கு பாத்தியத்தை பிரித்து அளிக்க வேண்டி வாதிகள் வழங்கிய சட்ட அறிவிப்பினை பெற்றுக்கொண்ட நான் அதற்கு எந்தவித பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த தாவா மொத்தம் 5 அட்டவணை சொத்துக்கள் குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா முதலாம் அட்டவணை சொத்தான ஆர்.எஸ்.எண்.541/5 பி எப்படி எங்களுக்கு கிடைத்தது என்றால் எனது

அப்பா சொத்து. அந்த சொத்தை பொறுத்து எனது அப்பா எனக்கு தனிப்பட்ட முறையில் ஏதாவது ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. 2 ஆம் அட்டவணை சொத்தான ஆர்.எஸ்.எண்.387/1ம் எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்டது அந்த சொத்தை பொறுத்தும், எனது அப்பா எனக்கு தனிப்பட்ட முறையில் ஏதேனும் ஆவணம் எழுதிக்கொடுத்தாரா என்றால் இல்லை. புல எண்கள்.359/3, 359/1 ஆகியவைகள் உள்ள நிலங்கள் பொறுத்து எனது அப்பா வா.சா.ஆ.1 ஆன பதிவு செய்யப்பட்ட கிரய ஒப்பந்த பத்திரத்தினை ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். 5 ஆம் அட்டவணை சொத்தான புல எண் 386/8 ஆனது என் அப்பாவின் அப்பா அய்யாங்கு என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று சொன்னால் சரிதான். மேற்படி 5 ஆம் அட்டவணை சொத்தை பொறுத்து என் அப்பாவின் அப்பா அய்யாங்கால் எந்தவிதமான கரவோலையும் எனக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றும், ஆனால் நான் அதுபோல் எழுதிக்கொடுத்தது போல் சொல்லி எனது தாயார் பெயரில் பி.வா.சா.ஆ.5 ஆன கிரய ஆவணத்தை தன்னிச்சையாக நானே உருவாக்கி உள்ளேன் என்று சொன்னால் சரிதான். எந்தவித கரவோலையும் எழுதிக்கொடுக்கவில்லை, எனது அப்பாவுடன் சேர்ந்து அவருடன் பிறந்தவர்கள் நான்கு பேர். அதனால் என் அப்பாவிற்கு பாகமாக வந்த 4 ல் 1 பங்கை பொறுத்து நான் எனது அம்மா பெயரில் கிரய ஆவணம் எழுதிக்கொடுத்தேன். பி.வா.சா.ஆ.5 ஆன கிரய ஆவணத்தில் சொல்லப்பட்ட எனது தாத்தா எனது பெயரில் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் கடந்த 30.10.2002 ஆம் தேதி கரவோலை

எதையும் நான் இந்த வழக்கு சம்பந்தமாக தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அதுபோன்ற கரவோலையே இல்லை. நான்தான் வீட்டிற்கு மூத்தபிள்ளை என்று சொன்னால் சரிதான். அதனால் குடும்ப சொத்துக்களை நான்தான் பராமரித்து பாதுகாத்து வந்தேன் என்று சொன்னால் சரிதான். அதனால் தாவா சொத்துக்களானது எனது பெயரிலோ, எனது தாயார் பெயரிலோ இருந்தாலும் அவைகள் என் தந்தை விஜயராகவனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதால் இத்தாவாவில் வாதிகள் கோரியபடி பாகபிரிவினை பெறத்தக்கவர்கள் என்று சொன்னால் வாதிகளுக்கு ஏற்கனவே 500 குழி நஞ்சை நிலமும் பணம் ரூ.1,00,000/-மும் பாகமாக கொடுத்துள்ளோம். அதனால் தாவா சொத்துக்கள் எனதுஅப்பா விஜயராகவனுக்கு பாத்தியப்பட்டதாக இருந்தபோதும், தற்போது அதில் வாதிகள் பாகம் கோர இயலாது. மேற்கண்டவாறு ஏற்கனவே வாதிகளுக்கு 500 குழி நஞ்சை நிலமும், பணம் ரூ.1,00,000/- மும் பாகமாக கொடுத்துவிட்டோம் என்று சொல்வது குறித்து தாவா பதில் வழக்குரையிலும், எனது முதல்விசாரணையிலும் நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். வாதிகள் கோரியபடி தாவா சொத்துக்களில் பாகத்தை பிரித்து அளிக்க நான் கடமைப்பட்டவன் என்றும், அதனால் வாதிகள் கோரியபடி இத்தாவாவில் தீர்ப்பு வழங்கவேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை

ஒம். G.கிருஷ்ணன்,
சார்புநீதிபதி,
திருவாரூர்